# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.CC.121/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.3 |
| Name | : | . வசந்தி |
| Father’s Name | : | . க.பெ.தட்சிணாமூர்த்தி |
| Village | : | . மும்முனி |
| Taluk | : | . வந்தவாசி |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : . | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 22.08.2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 1ம் எதிரி தட்சிணாமூர்த்தி எனது மருமகன் 2,3 எதிரிகள் எனது சம்மந்தி. 4ம் எதிரி 1ம் எதிரியின் தங்கை. எனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் தனித்தனியே முதல் திருமணம் நடைபெற்று விவாகரத்தாகி, கடந்த 27.08.2015ம் தேதி பெரியோர்கள் நிச்சயத்து திருமணம் திருத்தனி முருகன்கோவிலில் நடைபெற்றது.

எனது மகளை திருமணம் செய்து கொடுத்த நாளில் இருந்து நன்றாக வைத்துக்கொள்ளவில்லை. அவரது மாமியார் அவரை அசிங்க அசிங்கமாக தகாத வார்த்தைகளால் பேசுவார். அவருக்கு, அவரது குழந்தைக்கும் உடல்நிலை சரியில்லை என்றால் கூட எங்கள் வீட்டிற்கு அனுப்பிவிடுவார்கள். அவரது நாற்றநாள் அவருக்கு சொந்தவீடு இருந்தும் அங்கு வசிக்காமல் எனது மகள் வீட்டிற்கு வந்து அடித்து துன்புறுத்துவார். பணம் வாங்கி வா, நகை வாங்கி வா என்று துன்புறுத்துவார்கள். கையில் கிடைத்த பொருட்களை வைத்து எதிரிகள் எனது மகளை அடிப்பார்கள். அவரது மாமனார் வீட்டிற்கு தேவையான பொருட்களை எடுத்துவா என்று தொல்லை செய்வார். எனது மகளை மருமகள்போல் நடத்தவில்லை. எனது மகளை வீட்டு வேலைக்காரியாக நடத்தினார்கள். எனது மகளை வேலைக்காரியாகத்தான் கட்டிவந்திருக்கிறோம் என்று சொல்வார்கள். 1ம் எதிரியை அவரது தாயார் யார் கூட வேண்டுமானாலும் தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்று அவர் தொல்லை செய்வார். ஒருநாள் இரவு எனது மகளை தொல்லை செய்து குழந்தையுடன் வெளியே தள்ளிவிட்டார்கள். அதனால் எனது மகளும், குழந்தையும் எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார்கள்.

திருமணத்தின்போது எனது மகளுக்கு 15 சவரன் நகையும் 1ம் எதிரிக்கு 3 சவரன் நகையும் நாங்கள் போட்டோம், ரூ.60,000.ஸ்ரீ வண்டி வாங்குவதற்காக கொடுத்தோம். அதில் 10 சவரன் நகையை எதிரிகள் விற்றுவிட்டார்கள்.

பின்பு எனது மகள் வந்தவாசி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

மனுவின்பேரில் ஒத்தி வைக்கப்பட்டது.